**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**முதலாம் ஆண்டு – முதற் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

ஜனவரி – பிப்ரவரி 2021

**P201 மொழிபெயர்ப்பியல்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. ஹோமரின் ஒடிசியை இலத்தீனில் மொழிபெயர்த்தவர் யார்?
2. தமிழிலக்கியங்களில் பெரும்பான்மையாக மொழிபெயர்க்கப்பட்ட நூல் எது?
3. பைபிளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் யார்?
4. 'பிருகத்கதா' எனும் வடமொழி இலக்கியத்தின் தமிழாக்கம் எது?
5. சீன மகளிர் பற்றிய கதைகளின் தமிழ்ப்பெயர் என்ன?
6. 'ஹைக்கூ' கவிதை வடிவம் தோன்றிய நாடு எது?
7. 'மனோன்மணியம்' என்ற நூலின் ஆசிரியர் யார்?
8. 'மிருச்சகடிகம்' என்ற நூலை 'மண்ணியல் சிறுதேர்' என்று மொழிபெயர்த்தவர் யார்?
9. 'ஸ்ரீமத் பகவத்கீதை' எனும் வடமொழி நூலின் தமிழாக்கம் எது?
10. வை. கோவிந்தன் தொகுத்த குழந்தைகளுக்கான மொழிபெயர்ப்பு நூல் எது?
11. 'மொழிபெயர்ப்பியல் கோட்பாடுகளும் உத்திகளும்' எனும் நூலின் ஆசிரியர் யார்?
12. எஸ். ராமகிருஷ்ணன் யாருடைய நூலை மொழிபெயர்த்தார்?
13. 'நல்ல மொழிபெயர்ப்புகள் நம் காலத்தின் முக்கியத் தேவைகளில் ஒன்றாகும்' என்று கூறியவர் யார்?
14. 'இன்றைய தமிழ் வசன நடை' எனும் நூலின் ஆசிரியர் யார்?
15. காளிதாசரின் சாகுந்தல நாடகத்தைத் தமிழில் மொழிபெயர்த்தவர் யார்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. மொழிபெயர்ப்பின் தேவை என்ன?
2. மொழிபெயர்ப்பு – பொருள் வரையறை தருக.
3. மொழிபெயர்ப்பாளர்களுக்கு இருக்க வேண்டிய அடிப்படைத் தகுதிகள் மூன்றினைக் கூறுக.
4. மொழித்தழுவல் என்றால் என்ன?
5. மொழிபெயர்ப்புக் கொள்கைகளை வகுத்தவர்களுள் மூவரைக் குறிப்பிடுக.
6. நைடா கூறும் மூன்று விதமான மொழிபெயர்ப்புகள் எவை?
7. மொழிபெயர்ப்பின் தன்மை குறித்தெழுதுக.
8. திரைப்படத்துறையில் மொழிபெயர்ப்பின் தேவை குறித்து குறிப்பு வரைக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) மொழிபெயர்ப்பின் பயன்களைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) மொழிபெயர்ப்பு முறை குறித்து விரித்துரைக்க.

2. (அ) மொழிபெயர்ப்புப் பணி குறித்து கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) மொழிபெயர்ப்பு வகைகளை விளக்கியுரைக்க.

3. (அ) மொழிபெயர்ப்புக் கொள்கைகளைத் தெளிவுபடுத்துக.

(அல்லது)

(ஆ) பிறவகை மொழிபெயர்ப்பு குறித்து விவரிக்க.

***